# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

புதன்கிழமை 15.09.2021

supeedsam.com


supeedsam@gmail.com




# ஐ.நா.வை இனியும் ஏமாற்ற முடியாது

## சம்பந்தன் தெரிவிப்பு

(நமது நிருபர்)



பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு இனியும் எண்ணக் கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## கூட்டமைப்பின் நிலைப்பாட்டையே உயர்ஸ்தானிகரும் வெளிப்படுத்தியுள்ளார்



(ராஜ்)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியதையே ஐக்கிய நாடுகள் மனித உரிமை உயர்ஸ்தானிகரும் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்குப் பிரத்தியேக விஜயம் ஒன்றினை மேற்கொண்டு நேற்று அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...

## ஆணையாளரின் அறிக்கை மனவருத்தத்தை தருகிறது



தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தமது அறிக்கையில் குறிப்பிடாதது மனவருத்தத்தைத் தருவதாக நடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு எதிராக குற்றச்சாட்டு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயஸ்தானிகர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலம் பெயர் குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உருவாக்கித் தந்த அறிக்கையின் உண்மைத் தன்மையை ஆராயாமல், அப்படியே ஒப்புவித்துள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...

## வெளியக தலையீடுகளை நிராகரிக்கிறோம்

### ஐ.நா.வுக்கு இலங்கை பதில்



46/1 தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெளியக தலையீடுகளை நிராகரிப்பதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உள்ளக பொறிமுறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை சமர்ப்பித்து, ஐநா மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது அமர்வில் உரையாற்றும் போதே, அவர் இதனைத்

02 ஆம் பக்கத்தில்...

## சந்தனமாடு ஆற்றில் இரவு வேளையில் சட்டவிரோத மணல் அகழ்வு: போலிசில் முறைப்பாடு



(நமது நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி மூன்று கிராம சேவகர் பிரிவிலுள்ள சந்தனமாடு ஆற்றில் அண்மைய தினங்களாக இரவு வேளையில் சட்டவிரோதமாக மணல் அகளப்பட்டு வருவதாக தெரிவித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆற்றில் 2015 ஆம் ஆண்டில் இருந்து

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் 400 இந்து ஆலயங்கள் உடைப்பு

### இந்தியப் பிரதமருக்கு அவசர கடிதம்

இலங்கையில் சுமார் 400 வரையிலான இந்து ஆலயங்கள் சிறிலங்கா படையினரால் உடைக்கப்பட்டுள்ளதாக ஜோர்ஜ் பெர்ணான்டஸ் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

George Fenandas Foundation என்ற அமைப்பின் தலைவர்களும், இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களுமான திரு. அருண் நாயக் மற்றும் திரு. உத்தம் காண்டே போன்றவர்கள் இந்தியப் பிரதமர்

02 ஆம் பக்கத்தில்...

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: நிதி வழங்கியவர் என குற்றம் சாட்டப்பட்டவருக்கு அகதி அந்தஸ்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு நிதி உதவி வழங்கியவர் எனக் குற்றம்சாட்டப்பட்ட ஒருவருக்கு நியுசிலாந்து, அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது என 'ரேடியோ நியுசிலாந்து' தெரிவித்துள்ளது.

மேற்படி நபர் தெரியாமல் நிதி வழங்கியவர்

02 ஆம் பக்கத்தில்...




## காத்தான்குடி பல சரக்கு கடையில் பதுக்கி வைத்திருந்த பால்மா பக்கட்டுக்கள் மீட்கப்பட்டு விற்பனை



காத்தான்குடியில் கடை ஒன்றில் பதுக்கி வைத்திருந்த பால்மா பக்கட்டுக்கள் மீட்கப்பட்டு நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளினால் அவ்விடத்திலேயே உடனடியாக மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபையின் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளர

02 ஆம் பக்கத்தில்...







## முழுமையான ஓய்வை அறிவித்தார் மாலிங்க



சகல விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து ஓய்வு பெறுவதாக இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் லசித் மாலிங்க அறிவித்துள்ளார்.

லசித் மாலிங்கவின் உத்தியோகப்பூர்வ சமூக வலைத்தளங்களில் இந்த விடயத்தை அவர் பதிவிட்டுள்ளார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் சர்வதேச கிரிக்கெட்

02 ஆம் பக்கத்தில்...

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

எனவும் 'ரேடியோ நியுசிலாந்து' தெரிவித்துள்ளது.

அவருக்கு பயங்கரவாத இலக்குகள் பற்றி எதுவும் தெரியாது. பணம் யாருக்கு செல்கின்றது, எங்கிருந்து வருகின்றது என்பதும் தெரியாது என்பது குடிவரவு மற்றும் பாதுகாப்பு தீர்ப்பாயத்தின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் உள்ள தனது உறவினர் மற்றும் முகவர் ஒருவருடன் இணைந்து இவர் பணப்பரிமாற்ற திட்டம் மூலம் ஒரு மாதத்தில் பல தடவை பணம் அனுப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் விசாரணைகளின் போது அவரது தமிழ் மனைவியை இலங்கை பொலிஸார் கைது செய்து சித்திரவதை செய்துள்ளனர்.பின்னர் பணம் வாங்கிக்கொண்டு அவரை விடுதலை செய்துள்ளனர். இதனை தொடர்ந்து தம்பதிகள் தலை மறைவாகியுள்ளனர்.

அவர்கள் போலிக் கடவுச்சீட்டில் நியுசிலாந்து சென்றுள்ளனர். இதனை தொடர்ந்து அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஆதாரங்கள் நம்பகதன்மை மிக்கவை என தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டிருக்கலாம் என இலங்கை அதிகாரிகள் கருதும் பணப்பரிமாற்ற நடவடிக்கையுடன் அவர் தொடர்புபட்டுள்ளதால் அவர் இலங்கையில் சித்திரவதை செய்யப்படலாம் என தீர்ப்பாயம் குறிப்பிட்டுள்ளது. அவர் தனது நடவடிக்கைகள் மூலம் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு உதவும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை, அவர்களது கொள்கைகளிற்கு ஆதரவளிக்கவில்லை,தான் பரிமாற்றிய பணம் அவ்வாறானவர்களிற்கு சென்றது என்பதையும் அவர் அறிந்திருக்கவில்லை என தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்கள்,நிதி வழங்கியவர்களை விசாரணை செய்து தண்டிக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கப்படும் அழுத்தங்களை கருத்தில் கொள்ளும்போது அவரிடமிருந்து தகவல்களை பெறுவதற்காக அல்லது அவருக்கு தெரிந்திருக்காத தகவல்களை பெறுவதற்காக அதிகாரிகள் சித்திரவதைகளை பயன்படுத்தாமல் விடமாட்டார்கள் என கருதமுடியாது என தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

அவருக்கு கிடைக்கும் பணம் குறித்து அவருக்கு சிறிதளவே தகவல் தெரிந்திருந்தது. ஆனால் அவர் முகவர் இல்லை, மாறாக கொழும்பில் முகவர்களிடமிருந்து பணத்தை பெற்று வங்கிகளில் வைப்பிலிடும் கூரியர்.

தனது வெளிநாட்டு உறவினர் மூலம் வெளிநாட்டு முகவர் தெரிவிக்கும் வங்கிக் கணக்குகளிற்கு அவர் பணத்தை வைப்பிலிடுவார் எனவும் தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

அவர் சிங்களவர், ஆனால் வெளிநாட்டு முகவர் முஸ்லீம் பெண். அவரின் மனைவியின் சகோதரி முஸ்லீம் ஒருவரை திருமணம் செய்தது அதிகாரிகளின் கவனத்தை திசை திருப்பியிருக்கலாம் எனவும் தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

# முழுமையான ஓய்வை அறிவித்தார் மாலிங்க

போட்டிகளில் இருந்து ஓய்வினை அறிவித்திருந்தார்.

எனினும் தொடர்ந்தும் இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுவதாக தெரிவித்திருந்த லசித் மாலிங்க, இன்று அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

# இலங்கையில் 400 இந்து ஆலயங்கள்

நரேந்திர மோடிக்கு எழுதிய அவசரக் கடிதத்தலேயே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்கள்.

இலங்கையில் சுமார் 10,000 வரையிலான தமிழ் பெண்களை சிறிலங்கா படையினர் பாலியல் வல்லுறவு புரிந்துள்ளதாகவும் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

இலங்கை படையினரால் 3 இலட்சம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், 98ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதாகவும், 400 இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அவர்கள், இந்தியப் பிரதமர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கைவிடுத்துள்ளார்கள்.

# ஆணையாளரின் அறிக்கை மனவருத்தத்தை

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி அவர் குறிப்பிடாதது மனவருத்தத்தைத் தருகின்றது. எமது காணிகளை அரசாங்கம் தந்திரமாகவும் பலாத்காரமாகவும் கையேற்பது பற்றி அவர் எதனையும் குறிப்பிடப்படவில்லை. அடுத்த மார்ச் மாதக் கூட்டத்திற்கு முன்னர் இவை பற்றி முழு விபரங்களை நாம் சேகரித்து அனுப்ப வேண்டும்.

எனினும் பல முக்கிய விடயங்களை அவர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார். மக்களை வேவு பார்ப்பது அவர்களை அச்சுறுத்துவது மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாட்டாளர்களை, பத்திரிகையாளர்களை, காணாமல்போனோரின் குடும்ப உறுப்பினரைக் குறிவைத்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துவது போன்ற செயற்பாடு தற்போது விரிவடைந்துள்ளது.

# ஐ.நா.வை இனியும் ஏமாற்ற முடியாது

இலங்கை அரசை சர்வதேசக் கண்காணிப்புப் பொறிக்குள் சிக்கவைத்துக் கடும் அழுத்தங்களைக் கொடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரின் வாய்மூல அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை அரசு ஒருபோதும் தப்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரின் கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்றியே தீர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.




# காத்தான்குடி பல சரக்கு கடையில் பதுக்கி வைத்திருந்த

ஆர்.எப். அன்வர் சதாத் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபையின் கிழக்குமாகாண உதவிப் பணிப்பாளர ஆர்.எப். அன்வர் சதாத் தலைமையிலான அதிகாரிகள் நேற்று விசேட சோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு நகர், இருதயபுரம், ஊறணி, காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் சீமெந்து ,பல்மா, சீனி, அரிசி போன்றவற்றை பதுக்கி வைத்துள்ளமை தொடர்பாக கண்டறியும் திடீர் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது காத்தான்குடி பெரிய சந்தைக் கட்டிடத்திலுள்ள பலசரக்கு கடை ஒன்றில் சோதனையின் போது, அங்கு பதுக்கி வைக் கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பால்மா பக்கட்டுக்கள் மீட்கப்பட்டு அவை அவ்விடத்திலேயே உடனடியாகவே மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

தமக்கு பொது மக்களிடத்திலிருந்து கிடைத்த முறைப்பாட்டையடுத்து வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கையின் போதே இப் பால்மா பக்கட்டுக்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# சந்தனமாடு ஆற்றில் இரவு வேளையில் சட்டவிரோத மணல்

தற்பொழுது வரைக்குமான காலப்பகுதியில் மணல் அகழ்வு முற்றுமுழுதாக இடைநிறுத்தப்பட்டு தடை செய்யப்பட்டிருந்தது.

வீதி அபிவிருத்தி என்ற போர்வையில் சித்தாண்டி சந்தனமடு ஆற்றி பாரிய சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக தெரிவித்து ஏறாவூர் போலீசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மணல் அழ்வை தடுக்க வேண்டும் எனத் தொரிவித்து அக்காலப் பகுதியில் 11 இளைஞர்கள் சித்தாண்டி முருகன் ஆலய முன்றலில் உண்ணாவிதம் கூட இருந்து மணல் அகழ்வை முற்று முழுதாக நிறுத்தினர்.

சென்ற ஜூன் மாதம் 19ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் தலைமையில் சித்தாண்டி புதுவழி பிள்ளையார் ஆலயத்திலிருந்து சந்தனமடு ஊடாக இரண்டு கிலோமீட்டர் கொங்கிறீட் வீதிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு தற்பொழுது குறித்த வீதி அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

குறித்த வீதியானது வீதி அதிகார சபையினால் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டு அபிவிருத்தி இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் வீதி அபிவிருத்திக்கு தேவையான மணலை இரவு வேளையில் சுமார் 300 கீப் அளவிலான % மணல் குவியல்களாக குவிக்கப்பட்டு பாரிய சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்றிருக்கின்றதாக அப்பகுதியைச் சேர்ந்த பலர் தெரிவிக்கின்றார்கள். மணல் அகழ்வு இடம்பெற்ற இடத்திலிருந்து சுத்திவர சுமார் மூன்று கிலோமீட்டர் வரையிலான ஆற்று மணல் பரப்பில் தொடர்ச்சியாக கடந்த 6 வருடங்களுக்கு மேலாக பனம் பழ விதைகள் நடப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் பாரிய வெள்ளம் ஏற்பட்டு வருகின்ற நிலையில் அதற்குக் காரணமாக இருக்கின்ற மணல் அகழ்வை தடுத்து நிறுத்துவதற்காக கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக சித்தாண்டி சிகண்டி அறக்கட்டளை நிலையம் மற்றும் பொதுமக்கள் அத்துடன் குறித்த பகுதியில் அடிக்கடி சட்டவிரோத மணலில் ஈடுபடுகின்ற ஒரு சில நபர்களுக்கு இணக்க சபை மூலமாக தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் குறித்த பகுதியில் பனம் விதைகள் நடப்பட வேண்டும் எனவும் தெரிவித்த நிலையில் அனைவரும் சேர்ந்து குறித்த பகுதியில் தொடர்ச்சியாக விதை நடப்பட்ட நிலையில் பனை மரங்கள் வளர்ந்து வருகின்றது.

சூழலையும் வெள்ளப் பெருக்கையும் குறித்த ஆற்றினுடைய நிலப்பரப்பையும் பாதுகாத்துக் கொள்வதற்காக இவ்வாறாக நடப்படுகின்றது.

குறித்த வீதியின் அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தக்காரர்கள் மூலமாக இந்த மணல் அகழ்வு இரவோடிரவாக அப்பகுதியில் இருந்து அகழப்பட்டிருப்பதாக பொது அமைப்புக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

பல பன மரங்கள் பிடுங்கி வீசப்படும் பல மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் மு. முரளிதரன் உட்பட சிகண்டி அறக்கட்டளை நிலைய உறுப்பினர்கள் அப்பகுதிக்கு பொறுப்பான கிராமசேவகர் உட்பட பலர் நேற்று பிற்பகல் சென்று பார்வையிட்டதுடன் கருத்துக்களையும் தெரிவித்தனர்.

பின்னர் ஏறாவூர் போலீஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தனர். அதன்பின்னர் முறைப்பாடு செய்த பிரதேச சபை உறுப்பினர் உட்பட போலீசார் மற்றும் பலரும் குறித்த இடத்தை பார்வையிட்டனர். வருகை தந்த பொலிஸார் குறித்த இடத்தை பார்வையிட்டதுடன் ஆதாரங்களை பெற்றுக் கொண்டனர்.

வெள்ளப்பெருக்கை தடுப்பதற்காக ஆற்றின் மணல் பகுதியில் பனம் விதைகள் நடப்பட்டு அவை அழிக்கப்பட்டு அபிவிருத்தி என்ற போர்வையில் ஆற்று மணலை இரவோடு இரவாக கபளீகரம் செய்யவும் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கிறோம் போலீசாரின் முறையான தீர்வு கிடைக்காத பட்சத்தில் நீதிமன்றத்தை நாட இருக்கின்றோம் எனவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

# வெளியக தலையீடுகளை நிராகரிக்கிறோம்

தெரிவித்துள்ளார்.

ஐநா தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உள்ளக பொறிமுறைகளின் ஊடாக தீர்வு காணப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஐநா மனித உரிமைகள் பேரவை அதன் கொள்கைகளுக்கு ஏற்ப இயங்க வேண்டும் என்று இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது.

வெளியக தலையீடுகள் அரசியல் மயப்படுத்தப்படும் நிலையை உருவாக்குவதை தாம் 30/1 தீர்மானத்தில் கண்டுகொண்டதாகவும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து காணாமல் போனவர்கள் தொடர்பான இறுதிப் பட்டியலைத் தயாரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இழப்பீடுகளுக்கான அலுவலகம் 3,775 பேருக்கு இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் 8 அம்ச திட்டத்துடன் செயற்பட்டு வருகிறது.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, அதன் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு சர்வதேச தரங்களுக்கு ஏற்ப அதனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது. அது தொடர்பான அறிக்கை இம்மாத இறுதியில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு, அதன் செயற்பாடுகளில் துரித முன்னேற்றம் கண்டுள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனார் தொடர்பில் ஆராய்ந்து, பரிந்துரைகளை முன்வைப்பதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்டு விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. குறித்த ஆணைக்குழு, இதற்கு முன்னர் இருந்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளையும் ஆராயவுள்ளது. இது தொடர்பான இறுதி அறிக்கை அடுத்த 6 மாதங்களில் வெளியிடப்படும்.

என்று வெளியுறவு அமைச்சர் பீரிஸ் ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பித்து உரையாற்றும் போது, குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சிவில் சமூகங்களுடன் நல்லிணக்க மற்றும் அபிவிருத்தி பணிகளில் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து, நீதி நிலைநாட்டுவதோடு, பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க இலங்கை உறுதி எடுத்துள்ளதாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

# உயஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு எதிராக

குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய பொறிமுறைகளை கேள்விக்குட்படுத்தியதன் ஊடாக, மனித உரிமைகள் உயஸ்தானிகர் மிச்செல் பெச்லே,இலங்கை அரசியல் அமைப்பிற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் பிரதிபா மஹநாமஹேவா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது அமர்வில், மனித உரிமைகள் உயஸ்தானிகர் மிச்செல் பெச்லே ஸ்ரீலங்கா தொடர்பாக வெளியிட்ட வாய்மொழி மூல அறிக்கை குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மிச்செல் பெச்லெட் தெரிவித்த அனைத்து விடயங்களும் தேசிய ரீதியில் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்களேத் தவிர சர்தேசத்தின் தலையீட்டுடன் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் அல்ல, நாம் 46இன் கீழ் ஒன்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், எந்தளவு பொறுப்புடன் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை அவர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர் மனித உரிமைகள் பேரவையின் நோக்கங்களை மீறி கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# கூட்டமைப்பின் நிலைப்பாட்டையே உயர்ஸ்தானிகரும்

இன்றையதினம் ஜெனிவாவிலே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாகிற வேளையிலே ஐக்கிய நாடுகள் மனித உரிமை உயர்ஸ்தானிகர் அம்மையார் இலங்கை சம்பந்தமான பொறுப்புகூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள் என்ற அடிப்படையிலே 46/1 என்கின்ற தீர்மானம் மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட பின்னர் வாய் மூலமான முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்.

அதிலே மிகவும் விசேடமாக ஜூன் மாதத்திலே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஐக்கிய நாடுகள் நிறுவனத்தோடு பொறுப்பு கூறல் விடயத்திலேயும், நல்லிணக்கத்தினையும் தாங்கள் இணைந்து செயல்படத் தயார் என்று டுவிட்டர் மூலமாக அவர் விடுத்த செய்தியை மேற்கோள்காட்டி அதை தாங்கள் கவனித்திருப்பதாகவும் அதனை நடைமுறையிலே நாங்கள் காண விரும்புகிறோம் என்று ஆரம்பித்திருக்கிறார். அது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

ஜூன் மாதத்திலே அப்படியாக கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி அந்த டுவிட்டர் செய்தியைக் கொடுத்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாங்கள் அதைத் திரும்ப ட்விட் பண்ணி அதனை நாங்கள் அப்பொழுதே வரவேற்று, அதனை நடைமுறையிலே காண்பதற்கு, காத்திருக்கிறோம் என்று நாங்களும் கூறியிருந்தோம்.

அதே தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அம்மையாரும் கூறியிருக்கிறார். அதற்கு மேலதிகமாக, இலங்கையிலே மனித உரிமை நிலைமை, மோசமாகிக் கொண்டு போவதனை பல உதாரணங்களை மேற்கோள்காட்டி, அவர் கூறியிருக்கிறார். அடக்குமுறை, முன்னர் நினைவேந்தல், அப்படியான மனித உரிமை ஆர்வலர்கள், அப்படியானவர்களோடு இருந்தது.

இன்றைக்கு, தொழிற்சங்க பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்களுக்கும் கலந்திருக்கிறது என்ற ஒரு குறிப்பைக் கூறியிருக்கின்றார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்திலே, அவர்களுடைய உறவுகள் எதிர்பார்க்கிற மாதிரியான நீதி கொடுக்கப்பட வேண்டும் என்று திரும்பவும் அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

இலங்கையிலே இருக்கின்ற, தற்போது கொண்டுவரப்பட்டிருக்கிற அவசரக்கால பிரகடனம் குறித்து, அதனால் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து, அதன் மூலமாக இராணுவ மயமாக்கப்படுதல், இன்னும் தீவிரமாகலாம் என்பதனையும் கூறி, உறுப்பு நாடுகள், இலங்கையை இந்த நிலைமைகளைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்பதனையும் கூறி ஒரு அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்த வாய் மூலமான அறிக்கையை நாங்கள் ஏற்கனவே வரவேற்று இருக்கிறோம். மனித உரிமை உயர்ஸ்தானிகருக்கு எங்களுடைய நன்றிகளைத் தெரிவிக்கிற அதே வேளையிலே, உறுப்பு நாடுகள் இந்த விடயத்தைக் குறித்து, இன்றைக்கு பொதுவான அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்கின்ற போது, இலங்கை சம்பந்தமாக தங்களுடைய கரிசனையை, இந்த வாய் மூல அறிக்கையிலே எழுப்பப்பட்ட கரிசனைகளோடு ஒட்டி வெளிப்படுத்த வேண்டும் என்று நாங்கள் உறுப்பு நாடுகளிடத்திலே கோரிக்கை விடுக்கிறோம்.

இந்த 46/1 என்கின்ற தீர்மானத்திலே மிகவும் விசேஷமாக எடுக்கப்பட்ட ஒரு முடிவு சாட்சியங்களைச் சேகரிப்பதும், அவற்றைப் பாதுகாப்பதற்குமான பொறிமுறை இந்த வாய்மூல அறிக்கையில் இறுதியிலே, அது சம்பந்தமாகத் தான் எடுத்திருக்கிற நடவடிக்கைகளையும், ஏற்கனவே ஒரு இலட்சத்து இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட ஆவணங்கள் ஐக்கிய நாடுகள் கையிலே இருப்பதாகவும், அதனை ஆரம்பமாகக் கொண்டு மிகுதி வேலைகள், விரைவில் ஆரம்பமாகும் என்றும், சொல்லியிருக்கிறார்.

அந்த ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஆவணங்கள் என்று சொல்லப்படுபவை. முன்னர் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு, 2011 ஆண்டு, அறிக்கை வெளியிட்ட நிபுணர் குழு சேகரித்த ஆவணங்கள் அது அப்பொழுதே சொல்லப்பட்டது. இரகசியமாகப் பேணப்படலாம். ஒரு விசாரணை வருகிற போது மட்டும், அது வெளியிடப்படலாம் என்று.

அதற்கு பின்னர் 2014 ஆம் ஆண்டு ஒரு சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட்டு அதிலே சேகரிக்கப்பட்ட ஆவணங்களும் உள்ளன. ஆகவே இதற்கு மேலதிகமாக, இப்பொழுது இந்த ஆவணங்களைச் சேகரிக்கின்ற, பாதுகாக்கின்ற இந்த பொறிமுறை சம்பந்தமாகவும், அதற்கு தேவைப்படுகின்ற நிதி சம்பந்தமாகவும் அம்மையார் குறிப்பிட்டிருக்கிறார். இப்பொழுது பொதுச்சபை இந்த மாதம் நியூயோர்கிலே கூடவிருக்கிறது. அதிலே இதற்கு தேவையான நிதியையும் நாடுகள் வழங்கி தீர்மானிக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.

# ஆசிய நாடுகளின் தேசிய கொடிகளை மிக வேகமாக அடையாளம் கண்ட சாதனையாளராக நிந்தவூரை சேர்ந்த சிறுமி அனத் ஜிதாஹ்

## கின்னஸ் சாதனைக்கும் தயாராகின்றார்

(தர்மேந்திரா)

ஆசிய நாடுகளின் தேசிய கொடிகளை மிக வேகமாக அடையாளம் கண்ட சாதனையாளராக குட்டி சிறுமி பாத்திமா அனத் ஜிதாஹ் ஆசிய புத்தகத்தில் இடம் பிடிப்பதற்கு தெரிவாகி உள்ளார்.

இவர் நிந்தவூரை சேர்ந்தவர். தந்தை தொலை தொடர்பு பொறியியலாளர் ஆவார். தாய் முன்பள்ளி ஆசிரியர். இரு பிள்ளைகளில் இவரே மூத்தவர். இன்னும் 03 மாதங்களில் இவருக்கு 05 வயது. ஆசிய புத்தகத்தின் ஆசிரியர் குழு இவரின் தனித்துவ திறமையை பரிசீலித்து கிராண்ட்மாஸ்டர் விருது



வழங்கி கௌரவித்ததுடன் ஆசிய புத்தகத்தில் இவரின் சாதனையை பதிவிடுவதற்கு தீர்மானம் எடுத்து உள்ளது.

இவர் 48 ஆசிய நாடுகளின் தேசிய கொடிகளை 24 செக்கன்கள் மற்றும் 0% நிமிட செக்கன்களில் அடையாளம் கண்டு உள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி பொறுப்பாளரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் குழு உறுப்பினருமான றிஸ்லி முஸ்தபாவின் சார்பாக அனத் ஜிதாஹின் இல்லத்துக்கு இவரின் ஊடக செயலாளர் ரோஷன் முஹம்மட் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நேரில் வருகை தந்து பாராட்டி டப் ஒன்றை அன்பளிப்பு செய்தார்.

இதே நேரம் சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தின் நிந்தவூர் இணைப்பாளர் யூ. எல். எம். சஜித் மற்றும் செயற்பாட்டாளர்கள் பி. எம். பவாய்ஸ், எம். அஹ்சன் அஹமட் ஆகியோரும் நேரில் வந்து பாராட்டி பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

இதன்போது சாதனை சிறுமியின் தந்தை எம். எல். எம். ஜெசிம், தாய் யூ. கே. பாத்திமா ஜெளஹரா ஆகியோர் கருத்து கூறுகையில் அனத் ஜிதாஹ் மிகுந்த புத்தி கூர்மையும், நிறைந்த ஞாபக சக்தியும், சிறந்த அவதானமும் உள்ளவர், எந்த விடயத்தையும் ஒரு தடவையிலேயே கிரகித்து கொள்வார், நாடுகளின் தேசிய கொடிகளை அடையாளம் காண்பதில் இயல்பாகவே அவருக்கு நாட்டம் இருந்து வந்தது, அனைத்து நாடுகளின் தேசிய கொடிகளையும் அவரால் மிக வேகமாக அடையாளம் கண்டு சொல்ல முடியும், கின்னஸ் சாதனைக்கும் விண்ணப்பித்து உள்ளோம், இவரிடம் இன்னமும் பல திறமைகள் உள்ளன, நாடுகளின் தலை நகரங்கள் மற்றும் தலைவர்களையும் அடையாளம் கண்டு வேகமாக சொல்கின்றார், ஆங்கில சொற்களை வாசிக்கின்றார், எண்களை கூட்டி சொல்கின்றார், ஏராளமான சிறுவர் கதைகளை நினைவில் வைத்து சொல்கின்றார் என்று தெரிவித்தார்கள்.

# திருமலையில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைப்பு

## 67500 மில்லி லீட்டர் கோடா உடன் மூவர் கைது

(திருமலை ரவ்பீக் பாயிஸ்)



திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னியா, பீலியடி பள்ளம் குளத்துக்கு அருகில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூன்றுபேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அதே பகுதியைச் சேர்ந்த 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் விற்பனைக்காக தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த 90 கசிப்பு போத்தல்களும் கசிப்பு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் 6%500 மில்லி லீட்டர் கோடா. பரல்கள் மற்றும் பல உடற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்ற பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் தற்பொழுது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்ற வேளையில் மதுபான சாலைகள் மூடப்பட்டு இருப்பதால் கசிப்பு உற்பத்தி செய்து அதனை விற்பனை செய்து வருவதாக திருகோணமலை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து அங்கு சுற்றிவளைத்த பொலிஸார் குறித்த சந்தேக நபர்கள் மூன்று பேரையும் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரையும் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.




# கோரோனா காலகட்டத்தில் சுகாதார பழக்கவழக்கங்களை எந்த துறையினராக இருப்பினும் ஏற்றுக்கோள்ள வேண்டும்

(பாறுக் ஷிஹான்)

கொரோனாவில் இருந்து பாதுகாப்பு பெற மக்கள் காட்டுவிலங்குகள் பறவைகளின் தொடர்புகளை குறைத்து கொள்வதுடன் தற்போதைய கொரோனா காலகட்டத்தில் சுகாதார பழக்கவழக்கங்களை எந்த துறையினராக இருப்பினும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையில் கொரோனா தொற்றுநோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பில் இன்று கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது;

தற்போதைய கொரோனா காலகட்டத்தில் சுகாதார பழக்கவழக்கங்களை எந்த துறையினராக இருப்பினும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போது பொதுமக்கள் சரியான முறையில் சுகாதார பழக்க வழக்கங்களை கையாள்வதில்லை என்பதாகும். அதுமாத்திர



மன்றி உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைக்கமைய இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளை வயதுவித்தியாசமின்றி முழுமையாக நாங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது பிராந்தியத்தில் உள்ள மக்கள் வீடுகளில் ஓய்வெடுத்து கொள்ளுங்கள். தேவையற்று வீட்டில் இருந்து வெளியேறுவதை தவிருங்கள்.

இதற்கு அடுத்ததாக ஆயுள்வேத சுகாதாரதுறையானது மக்களுக்கு காட்டுவிலங்குகள் பறவைகளின் தொடர்புகளை குறைத்து கொள்ளுங்கள் என்பதில் ஆலோசனை வழங்குகின்றது. அடிக்கடி தோடம்பழம் தேசிக்காய் போன்ற பானங்களை நாம் அருந்த வேண்டும். அதிகமான இயற்கை உணவுகளை நாம் உண்ண வேண்டும். 8 தொடக்கம் 10 மணிவரை ஓய்வெடுக்க வேண்டும். அரிசிக்கஞ்சி போன்றவற்றை அடிக்கடி அருந்த வேண்டும். மாமிச உணவுகளை தவிர்ப்பது நல்லது. சூரிய ஒளியில் 1 மணித்தியாலம் கிடைக்க கூடிய வகையில் இருத்தல் வேண்டும். எமது வீடுகள் நாம் வசிக்கின்ற இடங்களை நன்கு காற்றோட்டம் உள்ள இடமாக மாற்றி கொள்ளல் வேண்டும். இவற்றை செய்வதன் ஊடாக டெல்டா மாத்திரமல்ல எந்த வைரஸ் திரிபுகள் எதிர்காலத்தில் உருவாகினாலும் அந்த நோயில் இருந்து நாம் எம்மை முழுமையாக பாதுகாத்து கொள்ள முடியும்.

தடுப்பூசி வழங்குதலானது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை தோற்றுவிக்கும் ஒரு செயற்பாடாகும். இதனால் ஆயுள்வேத மருந்து வகைகளை பாவிப்பதனாலும் எந்தவொரு பக்க விளைவுகளும் இந்த தடுப்பூசிகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு ஏற்படாது என நம்புகின்றேன். எனவேதான் மக்களிடம் தடுப்பூசிகளை முதலில் ஏற்றிக்கொண்டு பக்கபலமாக இந்த ஆயுள்வேத மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதனூடாக கொரோனா தொற்றிலிருந்து முழுமையான பாதுகாப்பினை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.




# இடம் மாற்றம்

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் கணக்காளராக இதுவரை காலமும் கடமையாற்றிய பி.டபிள்யூ. பாக்யா எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் கந்தளாய் தள வைத்தியசாலையின் கணக்காளராக இடம் மாற்றம் பெற்று செல்ல உள்ளார்.

இதனை முன்னிட்டு இன்று மாவட்ட செயலகத்தில் சிறிய பிரியாவிடை நிகழ்வொன்று மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவின் தலைமையில் நடைபெற்றது.

குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களது பங்குபற்றலுடன் மாத்திரம் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவரின் சேவையை பாராட்டி மாவட்ட அரசாங்க அதிபரினால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் அவருக்கான நினைவு சின்னங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.



2013ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இலங்கை கணக்காளர் சேவையன் மூன்றாம்தர உத்தியோகத்தராக இவர் மாவட்ட செயலகத்தில் இணைந்து கடமையாற்றியமை குறிப்படத்தக்கது

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், பிரதம கணக்காளர் எஸ். பரமேஸ்வரன், சக பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# மாத்தளை மேயரின் மனிதாபிமான முன்மாதிரி!





(வி.ரி.சகாதேவராஜா)

மாத்தளை மாநகரில், ஊரடங்கு காரணமாக முறையான உணவின்றி அலைந்து திரிந்த யாசகர்களுக்கு உணவளித்து நிதி வழங்கிய சம்பவம் நேற்று (14) இடம்பெற்றுள்ளது.

மாத்தளை மாநகரசபை மேயர் சந்தனம் பிரகாஷ் இவ்வாறு யாசகர்களுக்கு மனிதாபிமான உதவியைச்செய்தார்.

நேற்று, களுதாவளைப்பகுதியில் கார்ப்பட் வீதி செப்பனிடும் பணியை மேற்பார்வை செய்துவிட்டு திரும்புகையில் மாநகரில் ஒரு தொகுதி யாசகர்களை கண்ட மாத்தளை மேயர் வாகனத்தை நிறுத்திவிட்டு இக்கைங்கரியத்தை செய்தார்.

மேலும், அவர்களிடம் கலந்துரையாடலிலும் ஈடுபட்டதோடு, சிலரது குடும்பநிலைவரம் கருதி மேலும் உதவவும் திட்டமிட்டுள்ளார்.

யாசகர்களுக்கு ஒரு மேயர் இவ்விதம் மனிதாபிமான உதவியைச் செய்தமையை ஒரு முன்மாதிரியாக பதிவுசெய்து சமுகவலைத்தளங்களில் பாராட்டி பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

## கிண்ணியா தள வைத்தியசாலைக்கு 3 இலத்திரனியல் திரை வழங்கிவைப்பு



(இஃஜாஸ் ஏ பரீட்)

மத்திய சுகாதார அமைச்சின் ஊடாகப் பெறப்பட்ட மருத்துவ உபகரணங்கள் கிண்ணியா தள வைத்தியசாலைக்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக்கினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வு கிண்ணியா தள வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எம்.ஜவாஹீர் தலைமையில் நடைபெற்றன.

கொழும்பு சுகாதார அமைச்சில் பெறப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களை பாராளுமன்ற உறுப்பினர் கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எம்.ஜவாஹீரிடம் கையளித்தார்.

கிண்ணியா தள வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் ஐ.ஏம்.ஜவாஹீரின் வேண்டுகோளுக்கிணங்க இவ் உபகாரணங்கள் பெற்றுக் கொடுக்கப் பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார் .

மேலும் இவ் இலத்திரனியல் திரையில் இரத்த அழுத்தம் மற்றும் சுவாச விகிதம், ஈசிஜி போன்ற பல்வேறு விடயங்களை ஒரே தடவையில் பார்க்கக்கூடிய வசதி உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் மொத்த பெறுமதி 4 . 5 மில்லியன் ரூபா ஆகும்.

இங்கு நடைபெற்ற நிகழ்வில் வைத்தியசாலை அத்தியட்சகர் உட்பட வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக் இங்கு கருத்து தெரிவிக்கையில்:-

இவ் வைத்தியசாலையை தரம் உயர்த்த வேண்டிய தேவை உள்ளது அதற்காக வேண்டி அருகில் வசிக்கும் குடியிருப்பாளர்களை வேறு இடங்களுக்கு குடி அமர்த்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும்,இவ் வைத்திய சாலை அபிவிருத்தி செய்வதற்காக 2 நாடுகளுடன் பேசி வைத்தியசாலைக்கு தேவையான வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான முன்மொழிவுகளை அந்நாடுகளுக்கு வழங்கியுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

## அதிகாரமிக்க அமைச்சராக இருந்து கொண்டு முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்தவர் அலி சப்ரி

### முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

அன்று கொலைகாரர்களுக்காகவும், போதைப் பொருள் வியாபாரிகளுக்காகவும், பாதாள உலக தலைவர்களுக்காகவும் வாதிட்டு ஹராம் ஹலால் பாராது வருமானத்தை ஈட்டி வந்த அலி சப்ரி கடந்த ஒரு வருடமாக முஸ்லிம் அமைச்சர் ஒருவர் அமைச்சரவையில் இருக்கிறார் என்ற பெயரை உலகத்திற்கு காட்டிக்கொண்டு இலங்கை முஸ்லிம்களுக்கு செய்த அநியாயங்கள் ஏராளம் என முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் மௌலவி ஐ.எம். முகம்மட் மிப்லால் குற்றம்சாட்டியுள்ளார்.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் இஸ்லாமிய இயக்கங்களை பொய்க் குற்றச்சாட்டின் பெயரில் தடை செய்தது, அமைச்சர் அலி சப்ரி தனக்கு விருப்பமில்லை என்பதற்காக புர்கா மற்றும் நிகாபை தடை செய்தது, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல அப்பாவிகளுக்கு எதிராக பொய்யான குற்றப்பத்திரிகை சமர்ப்பித்து அவர்களை பயங்கரவாதிகளாக்கியது, முஸ்லிம் தனியார் சட்டத்தை குர்ஆன், ஹதீசுக்கு முரணாக மறுசீரமைப்புக்கு சிபாரிசு செய்தது, 16 வயதிற்கு உட்பட்டவர்கள் மதரஸாக்களுக்கு அனுமதிக்கக் கூடாது என்ற சட்டத்தை அமைச்சரவையில் முன்மொழிந்தது என பல்வேறு செயற்பாடுகளை முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக அவர் செய்துள்ளார்.

அத்துடன் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அமைச்சர் பதவி அளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்த நிலையில் அதனை அவருக்கு கொடுக்காமல் ஜனாதிபதி ஊடாக தடை செய்ததும் அலி சப்ரியே. அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றம் சென்றது மற்றும் அமைச்சர் ஆனது முஸ்லிம்களது வாக்குகளால் அல்ல. ஆனால் முஸ்லிம்களுக்கு அவரூடாக நன்மைகள், நலவுகள் எதுவும் நடக்கும் என்பதை நாம் எதிர்பார்க்கவும் இல்லை அவர் அவ்வாறு செய்யவும் மாட்டார். ஆனால் தயவு செய்து முஸ்லிம்களுக்கு எதிரான, இஸ்லாத்திற்கு எதிரான சட்ட திட்டங்களை அமுல்படுத்துவதையும் அதற்கு ஆதரவளிப்பதையும் உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள். மேலும் இன்னும் பல சதிகளுடனும், திட்டங்களுடனும் இஸ்லாத்திற்கு எதிரான ஐரோப்பிய நிறுவனங்களின் யூரோவிற்கும், டொலருக்கும் அடிமையாகி இது போன்ற அநியாயங்களை செய்து கொண்டிருக்கும் அலி சப்ரியை நாங்கள் அல்லாஹ்விடமே பொறுப்பு சாட்டுகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## கிண்ணியாவில் சேதன பசளை மூலமாக மிளகாய், கறிமிளகாய் அமோக விளைச்சல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட வட்டமடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மிளகாய் ,கறி மிளகாய் அமோக விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளதாக செய்கையாளர் தெரிவித்தார்.

சேதனப் பசளையினை பயன்படுத்தி சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பரப்பில்



குறித்த பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசன நவீன முறை மூலமாக நீர் விரயமாவதை தடுத்து இச் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைய இது முன்னெடுக்கப் பட்டுள்ளது. கிண்ணியா பகுதியை சேர்ந்த தனிநபரான சமீம் என்பவரே இப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளார். தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.அனீஸ் அவர்களின் ஆலோசனைகளை பெற்று பாரிய விளைச்சலினை பெற்றுள்ளதாக விவசாயி இதன் போது தெரிவித்தார். இரு ஏக்கரில் கால் ஏக்கர் பகுதியில் மாத்திரம் சுமார் 1000 கிலோ கிராம் கறி மிளகாய் மிளகாய் அறுவடை செய்து தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு அனுப்பி வருபானமீட்டியதாகவும் தெரிவித்தனர். எதிர்காலத்தில் இப் பகுதியில் பல ஏக்கர் நிலங்களில் இவ்வாறான பயிர்ச் செய்கையில் ஈடுபட்டால் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு பொருளாதார முன்னேற்றங்களையும் கண்டு கொள்ள முடியும் எனவும் இச் செய்கை மூலம் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபா இலாபமாக மீட்டலாம் என எதிர்பார்ப்பதாகவும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அனீஸ் மேலும் தெரிவித்தார்.

## காணவில்லை



(எஸ்.நாகராஜா)

காரைதீவு - 07 ஆம் பிரிவு, விஷ்ணு வித்தியாலய வீதி என்ற முகவரியைச் சேர்ந்த ஜெயராஜா ஜனேஜா எனும் பெயருடைய யுவதியை கடந்த 22.04.2021 முதல் காணவில்லையேன பெற்றோர் தேடி வருகின்றனர்.

இத்திகதியில் வீட்டிலிருந்தவாறு காணாமல் போன இவரைப் பெற்றோர்கள் பல இடங்களிலும் தேடியும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவரைப்பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் 0758120174 அல்லது 0758202146 என்ற கைத்தொலைபேசிக்கு அறியத்தருமாறு இவரது பெற்றோர் வினயமாகத் தெரிவித்துள்ளனர்.

## சேதனப் பசளை செய்கை பாரிய இலாபம்



(எம்.ஏ.றமீஸ்)

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்து விவசாயச் செய்கையாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் மக்கள் நல செயற் திட்டங்கள் தற்போது நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக, அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள ஒலுவில் கிராமத்தில் சேதனப் பசளை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கை மூலம் சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் இத் திட்டம் இப்பிரதேசத்தில் வெற்றியளித்துள்ளதாகவும் பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 32 கிராம சேவகர் பிரிவுகளிலும் சேதனப் பசளை உற்பத்தி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, ஒலுவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி உதவி பெற்று வரும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் உதவி மூலம் சேதனப் பசளை உற்பத்திக்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

சூழலில் காணப்படும் தாவரங்களின் பாகங்கள், பறவை மற்றும் விலங்குக் கழிவுகள், குப்பை கூழங்கள், வைக்கோல் போன்றவற்றை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட சேதனப் பசளை மூலம் செய்கை பண்ணப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கையால் கூடிய விளைச்சல் கிடைத்துள்ளதாக இப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளை கொண்டு இம்முறை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதன் மூலம் என்றுமில்லாதவாறு கூடிய வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அறுவடை கிட்டியதாகவும், நஞ்சற்ற உணவு உற்பத்தியினை மேற்கொண்டமை மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியினைத் தருவதாகவும் விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இரசாயன உர வகைகள், கிருமி நாசினி போன்றவற்றைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப் படுகின்றபோது பல்வேறான பக்க விளைவுகள் ஏற்படுவதோடு மக்களுக்கு பாரிய செவீனங்களும் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் சேதன உற்பத்தி இட்டு மேற்கொள்ளப் படும் பயிர்ச் செய்கை மூலம் நோயற்ற வளமான எதிர்கால சந்ததியினை உருவாக்க முடிவதோடு, நிறைவான வருமானத்தினையும் பூரண பயன்பாட்டினையும் பெற்றுக் கொள்ள முடியும் என துறைசார் முக்கியஸ்தர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## ஜெனிவா அமர்வு இலங்கை தமிழ் மக்கள் விடயத்தில் நல்லெண்ணத்தினை ஏற்படுத்தும்

(இ.சுதாகரன்)

ஜெனிவாவில் நடைபெறுகின்ற மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது அமர்வு இலங்கை தமிழர் விடயத்தில் சிறந்த தீர்வினை ஏற்படுத்தும் அதற்கான முயற்சியில் சர்வதேசம் ஈடுபடுகின்றமை வரவேற்கத்தக்கது.

இவ்வாறு ஜெனிவாவில் நடைபெறுகின்ற மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது அமர்வு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிக்கையில் இலங்கை தமிழர் விடயத்தில் சர்வ தேசத்தின் பார்வை மேலோங்கிக் காணப்படும் சந்தர்ப்பத்தில் வடகிழக்கிலுள்ள ஒரு சில அரசியல் வாதிகள் தாம் தீர்வு விடயத்தில் முழுமையான பாத்திர மேற்பது போன்று நாடகங்களை அரகேற்ற நினைப்பது அரசியல் இருப்பினை தக்கவைப்பதற்கான வியூகமாக அமைந்துள்ளது.

வடகிழக்கு பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்ந்த சுமார் 40 க்கு மேற்பட்ட கிராமங்கள் நில ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதனை மறந்து கபட நாடகங்களை அரகேற்ற நினைக்கும் அரசியல் வாதிகள் தாம் அரசிலுக்குள் எவ்வாறு வந்தனர் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் நேசிக்கின்ற மக்கள் பிரதி நிதிகள் தமக்கு வாக்களித்த தமிழ் மக்களின் விடயத்தில் முடியுமான வரை கூடிய கரிசனை காட்ட வேண்டும் மாறாக மாற்று இனத்தவரின் மாயைக்குள் தம்மை கொண்டு செல்ல முடியாது. மாற்று இனத்தவர்களின் உரிமைக்கு குரல் கொடுப்பதற்கு அவர்களின் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள் என்பதனை தமிழ்ப் பிரதிநிதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.தமிழ் மக்களின் எத்தனையோ பிரச்சினைகள் செறிந்து காணப்படும் நிலையில் அதனை விடுத்து கட்சிக் குடும்பத்தினுள் தகராது ஏற்ப



டுத்துவதனை அரசியல் வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் மக்கள் அதற்கான பாடத்தினை எதிர்வரும் காலங்களில் புகட்டுவார்கள் எனத்தெரிவித்தார்.



## எம்.ஐ.அச்சி முஹம்மதின் ‘எனது நிலமும் நிலவும்’ கவிதைத் தொகுதிக்கு அரச சாஹித்திய விருது

(எஸ்.அஷ்ரப்கான்,ஏ.எச்.எம்.ஹாரிஸ்,ஏ.எம்.அஜாத்கான்)

சம்மாந்துறையைச் சேர்ந்த ஆசிரியரும் கவிஞருமான எம்.ஐ.அச்சி முஹம்மதின் ‘எனது நிலமும் நிலவும்’ கவிதைத் தொகுதி அரச சாஹித்திய விருதைப் பெறுகிறது.

தமிழா ஊடக வலையமைப்பின் ஆலோசகரும் ,வித்யாசாகர் கல்வி இலக்கிய கலாசார பன்னாட்டுக் கலைமன்றத்தின் செயலாளரும் மற்றும் ஆசிரியருமான சந்தக்கவி எம். ஐ. அச்சி முகம்மத் அவர்கள் பிரதேச சமூக சேவை அமைப்புக்களில் இணைந்து பல்துறை சமூக சேவையினை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59



“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206



கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |
| நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும். | |

இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00



GRUNAU 1
ASIAN FOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# மாபெரும் தலைவரே மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப்

**இலங்கை முஸ்லிம் மக்களின் என்றும் மங்காத மாபெரும் தலைவரே மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் ஆவார். அவரின் 21 ஆவது ஆண்டு நினைவாக இக் கட்டுரையை ஒரு இளைஞனாகிய நான் எழுதுகின்றமை மிகவும் மகிழ்ச்சியை தருகின்றது.**

## எம்.எச்.எம்.அஷ்ரஃப் பற்றிய அறிமுகப் பார்வை

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையாக திகழும் அஷ்ரஃப் 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி பிறந்தார். அஷ்ரஃப் அவர்களின் தந்தையின் பெயர் முஹம்மது ஹுசைன், தாயாரின் பெயர் மதீனா உம்மா. அவரின் தந்தை கல்முனையை பிறப்பிடமாகக் கொண்டவர். அதுபோல் தாயார் சம்மாந்துறையை சேர்ந்தவர். தந்தை வழியில் கல்வியும் தாய் வழியில் ஆன்மீகமும் இணைந்த பாசறையில் பிறந்தவரே அஷ்ரப் ஆவார். கல்முனையில் வளர்ந்த அஷ்ரஃப் கல்முனை அல்-அஸ்ஹர் ஆண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் பின் உயர்நிலை கல்வியை கல்முனை பற்றிமா உவெஸ்லி கல்லூரியிலும் கற்றார். பின்னர் தனது பட்டப் படிப்பை இலங்கை சட்டக் கல்லூரியில் கற்று 1975 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக பட்டம் பெற்றார். ஒரு தலைவருக்குரிய ஆளுமை அஷ்ரஃப் அவர்களின் இளமைப் பருவத்தில் காணப்பட்டது என அவரின் வரலாற்றை ஆய்வு செய்தவர்கள் கூறுகின்றனர். தன்னுடைய இளம் துடிப்பு மிக்கப் பருவத்தை தான் விரும்பிய பிரகாரம் ஏனோதானோ என கழிக்காது விவகாரங்களைக் பற்றி சிந்திக்கக் கூடிய தன்மை கொண்டவராகவும் காணப்பட்டார். தலைமைத்துவ ஆளுமை, ஆன்மீகம், இலக்கியம், சட்டம் என பல்துறை ஆளுமை மிக்க அவர் தனது இளமைக் காலத்தில் இருந்தே தன்னை அர்ப்பணித்தார். பாடசாலைகளில் கவிதை எழுதுதல், மேடைப் பேச்சு போட்டியில் பங்கேற்றல் போன்ற பல நிகழ்வுகளில் பங்குபற்றி தன்னை அடையாளப் படுத்தி பல சாதனைகளை படைக்கக் கூடியவராக காணப்பட்டார். ஒரு முறை 'இந்த அஷ்ரப்ஃபைக் கண்டுபிடித்த கொலம்பஸ் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் தான்' என்று கூறியதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தம் என நம்புகின்றேன்.





அஷ்ரஃப் அவர்கள் சிறு வயதிலேயே துடிப்புள்ள ஆளுமை. சிறந்த பேச்சாளர். வாதத் திறமை மிக்கவர். ஒருமுறை பாடசாலையில் மாணவன் ஒருவரின் இருக்கையில் ஊசி குத்தி வைத்ததாகவும் அது அந்த மாணவனை பதம் பார்த்து விட்டதாகவும் குறித்த மாணவன் ஆசிரியரிடம் முறையிட்டார். ஆசிரியர் அஷ்ரஃப்பை அழைத்து கைய நீட்ட சொன்னதும் அஷ்ரப் ஆசிரியரை நோக்கி நான் இவரிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்றார். ஆசிரியரும் அனுமதி கொடுத்தார். அஷ்ரஃப் அந்த மாணவனை நோக்கி நான் ஊசி குத்தியதை நீ கண்டாயா? என வினவ மாணவன் ஆம் என்றார். அப்போது அஷ்ரஃப் கண்டால் நீ ஏன் அதில் இருக்க வேண்டும் என்றார். அஷ்ரஃபின் வாதத் திறமை ஆசிரியரை ஆச்சரியப்படுத்தி சிரிக்க வைத்தது. எனவே இவ்வாறு தனது இளமைக் காலத்தில் இருந்தே பல்வேறு திறமை மிக்கவராக காணப்பட்டார். அஷ்ரஃப் எனும் தலைவர் சிறு பராயத்தில் இருந்தே வளர்ந்து வந்த தலைவர் என்பதை நாம் விளங்க முடியும்.

## அஷ்ரஃபின் பன்முக ஆளுமை

மறைந்த மாமனிதர் அஷ்ரஃப் ஒரு தனி ஆளுமை அல்ல. பல துறைகளில் தன்னை ஈடுபடுத்திய பன்முக ஆளுமையாகும். அஷ்ரஃப் அவர்களின் பன்முக ஆளுமையை அரசியல், இலக்கியம் சட்டம் உள்ளகட்ட துறைகளின் ஊடாக ஆராய முடியும். அந்த வகையில் அரசியல் துறையில் அஷ்ரஃபின் ஆளுமை மிக விரிந்ததாகும். அவரின் வாழ்வில் அரசியல் துறைக்கான அர்ப்பணிப்பு நீண்டதாகும். ஒரு சமூகத்தின் அரசியல் தலைவர் என்பதற்கு அவரின் அரசியல் ரீதியான ஆளுமைகள் குறிப்பிடத்தக்கவையாகும். 1983 ஜூலைக் கலவரத்தை தொடர்ந்து இனப்பிரச்சினைக்கான அதிகார பகிர்வு விடயத்தில் இந்தியாவின் அழுத்ததின் காரணமாக இலங்கை அரசு ஒரு பேச்சு வார்த்தை ஆரம்பித்தது. அப் பேச்சு வார்த்தையின் போது முஸ்லிம் சமூகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சர் கலாநிதி பதியூதீன் மஹ்மூத் அவர்களின் தலைமையில் இயங்கிய 'முஸ்லிம் கவுன்சில்' என்ற அமைப்பின் பிரதிச் செயலாளர் பதவியை வகித்த அஷ்ரஃப் அப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு கிழக்கிலங்கை முஸ்லிம்களின் உரிமை தொடர்பாக அவர் எடுத்த நடவடிக்கைகள் வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. இது அவரின் அரசியல் ஆளுமைக்கு மிகப்பெரிய சான்றாகும். இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நிலையை அஷ்ரஃப் அன்று ஆழமாக புரிந்துள்ளார். தனித்துவமாக உரிமைகளைப் பேணி வாழக்கூடிய வகையில் அதிகாரங்கள் அப்போது காணப்படவில்லை என்பதை உணர்ந்த அஷ்ரஃப் முஸ்லிம்களின் உரிமைகளையும்இ அரசியல் அதிகாரங்களையும் அடைந்து கொள்வதற்கு தனித்துவமான அரசியல் பயணம் அவசியம் என்பதை சமூகத்திற்கு வெளிப்படுத்தி சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியை உருவாக்கி சிதறிக்கிடந்த சமூகத்தை ஒன்றுபடுத்தி தனித்து அரசியல் பாதையில் பயணிக்க வைத்தமை அஷ்ரஃபின் வரலாற்று சாதனையாகும். முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிப் பாதைக்கு அஷ்ரஃப் மேற்கொண்ட பணிகள் அதன் மூலம் வெற்றியீட்டிய சமூகம் என்பன அஷ்ரஃபின் அரசியல் ஆளுமைக்கு சான்றுகளே. எனவே இவ்வாறு அவரின் ஆளுமையை கூறமுடியும். அஷ்ரஃப் அவர்களின் ஆளுமைகளுள் மற்றுமொரு பகுதியே இலக்கியமாகும். அவர் ஓர் அரசியல்வாதி என்பதையும் தாண்டி அழகிய இலக்கியவாதி. தமிழ் இலக்கிய வல்லமை அவரின் சிறுவயதில் இருந்து வந்த விடயமாகும் என்பது அவரின் வரலாற்றை ஆராயும் போது புலப்படுகின்றது. 10 வயதிலிருந்தே கவிதை எழுதக்கூடியவராக காணப்பட்டார். ஒரு தேவை இ நெருக்கடி தோன்றும் பட்சத்தில் அவருக்குள்ளிருந்தே கவிதை ஊற்றெடுக்கும். அவர் எழுதிய கவிதைகளுள் 1962 இல் தேசிய முரசில் தாய் பற்றிய கவிதை பிரசுரமானது. அரசியல் பயணங்களை கூட கவிதை வடிவத்தில் வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'நான் எனும் நீ' என்ற அவரது பிரபல்யமான கவிதை நூலுக்கு இந்தியாவின் தமிழகத்தில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அணிந்துரை வழங்கியமை அவரின் இலக்கியத்திற்கு மிகப்பெரிய சான்றாகும். மேலும் 19%% இல் அட்டாளைச்சேனையில் இடம் பெற்ற தேசிய மீலாது விழாப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட தென்னிந்திய புகழ் பெற்ற கவிஞர் கவிக்கோ அப்துர் ரஹ்மான் தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கு 'கவிஞர் திலகம்' என்ற பட்டத்தை சூட்டினார். எனவே இவ்வாறு இலக்கியத்திற்கு வல்லமை பெற்றவரே எம்.எச்.எம்.அஷ்ரஃப் ஆவார். அஷ்ரஃப் அவர்களின் தொழில் வாண்மையாக காணப்படுவது சட்டம் ஆகும். அவர் ஒரு சட்டத்தரணி ஆவார். சட்டத்துறையில் அஷ்ரஃப் அவர்களின் ஆளுமை கம்பீரமானதாகும். சட்டத்தரணியாக வேண்டும் என்ற நீண்ட கால இலக்கைக் கொண்ட அஷ்ரஃப் தமது கற்றல் நடவடிக்கைகளில் அதற்கு ஏற்ப தன்னை தயார் படுத்தி பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 1972 இல் சட்டத்தரணியாக வெளிவந்தார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களுக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட குற்றப்பிரேரணையை தமது அரசியல் இராஜதந்திரத்தாலும்இ சட்டப்புலமையாலும் அதனை தடுத்து நிறுத்தி பிரேமதாசவை பாதுகாத்த ஆளுமை அஷ்ரஃப் ஆவார். இவ்வாறு தனித்துவமான அரசியல்இ இலக்கியம்இ சட்டம் என்ற பல்துறை ஆளுமை மிக்கவரே தலைவர் அஷ்ரஃப் ஆவார்.

## அஷ்ரஃப் அவர்களின் மறைவும் இன்றைய முஸ்லிம்களின் அரசியல் பாதையும்

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நிலையை அன்றைய காலத்தில் தெளிவாக புரிந்திருந்தவர் அஷ்ரஃப். அஷ்ரஃப் அவர்களின் வருகை கிழக்கிலங்கை முஸ்லிம்களின் அரசியல் எழுச்சிக்கு காரணமாக அமைந்தது. 1980 களில் ஆயுதக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்த காலத்தில் கிழக்கு முஸ்லிம்களின் சமூகஇ பொருளாதார மற்றும் வாழ்வியலில் அச்சநிலை ஏற்பட்டது. அவர்களின் பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முஸ்லிம் தலைமையின் வெற்றிடம் மக்களிடம் உணரப்பட்டது. அந்த நிலையில் முஸ்லிம்களின் இருப்பை உறுதிப்படுத்தவும்இ உரிமைகளைப் வென்று கொள்ளவும் முன்வந்த தலைவர் அஷ்ரஃப் ஆவார். சிதரிக்கிடந்த சமூகத்தை ஒன்றிணைந்து புதிய அரசியல் பாதையை உருவாக்கி அதில் பயணித்தார். முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியின் மூலம் முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம் பாதுகாக்கப்பட்டது. இன்றைய காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம் பலவீனமான முறையில் செல்லக்கூடியதை அவதானிக்க முடிகின்றது. அஷ்ரஃப் அவர்கள் உருவாக்கி பயணித்த அரசியல் பாதை அவரின் மறைவுக்குப் பின் சிதறடிக்கப்பட்ட நிலையில் செல்கின்றது. முஸ்லிம்களின் உரிமைகளை வென்று கொள்வதற்கு தக்கவகையில் தனித்துவமான கட்சி காணப்படுகின்றதா? என்பது இன்றைய காலத்தில் கேள்விக்குள்ளாக்கும் விடயமாக காணப்படுகின்றது. தலைமைத்துவ முரண்பாடு, கட்சி பிளவு, அரசாங்கத்தில் முஸ்லிம் தலைவர்களில் பலவீனமான பார்வை, சமூகத்தின் பிளவுபட்ட அரசியல் போக்கு உள்ளிட்ட பல காரணிகளால் இன்றைய முஸ்லிம்களின் அரசியல் பாதை பலவீனத்தை சந்தித்துள்ளது. எனவே தலைவர் அஷ்ரஃப் அவர்களின் மறைவு முஸ்லிம் சமூகத்தின் நிரப்ப முடியாத இடைவெளியாகும். அவர் விட்டுச் சென்ற இடைவெளி பூரணப்படுத்தாமல் உள்ளது என்பது யதார்த்த பூரணமான உண்மையாகும்.

## இன்றைய காலத்தில் பயணிக்கப்பட வேண்டிய அரசியல் பாதை

இன்றைய காலத்தில் முஸ்லிம்களின் அரசியல் தளம் உறுதியாக காணப்பட வேண்டும். அதன் பாதை நவீனத்துவம் அடைய வேண்டும். மக்களின் அபிப்பிராயம் வென்ற அரசியல் பாதை இன்றைய காலத்திற்கு மிக அவசியமாக உள்ளது. அந்த வகையில் இவ்வாறான விடயங்களை உள்ளடக்கிய பலம் மிக்க சிறந்த அரசியல் கட்டமைப்பை உருவாக்கி பயணிக்கக் கூடிய அரசியல் பாதைக்கு சில சீர்திருத்தங்கள் அவசியமாகும். அவற்றை பின்வருமாறு நோக்க முடியும்.

ஒன்றுபட்ட அரசியல் தலைவர்கள், சமகாலத்தில் பொருந்தக்கூடிய கொள்கைகள், இன நல்லிணக்க வேலைத் திட்டங்கள், சமூக நலன்கள் முதன்மைப்படுத்தப்படல் இளைஞர்களை வலுவூட்டல், மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்தல், பெரும்பான்மை சமூகத்தின் அபிப்பிராயத்தை பெறக்கூடிய செயற்பாடுகள், சர்வதேச தொடர்புகள் முதலான விடயங்களை உள்ளடக்கிக் கொண்டு பயணிக்கக்கூடிய அரசியல் பாதை இன்றைய காலத்திற்கு மிக அவசியமாகும். இவை போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். சிறந்த அரசியல் கட்டமைப்பை உருவாக்கி கொண்டு பயணிப்பது இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் மக்களுக்குள்ள தேவைகளாகும்.

தலைவர் அஷ்ரஃப் பற்றிய அறிமுகப் பார்வைஇ அவர்களின் பன்முக ஆளுமை, அஷ்ரஃபின் மறைவும் இன்றைய முஸ்லிம்களின் அரசியல் பாதை, இன்றைய காலத்தில் பயனளிக்கப்பட வேண்டிய அரசியல் பாதை உள்ளிட்ட தலைப்புகளில் உள்ளடக்கிய இந்த கட்டுரை 2021 ஆம் ஆண்டு அஷ்ரஃப் அவர்களின் அவர்களின் 21 வது நினைவுபகிர்வாக



எழுதியுள்ளேன்.இது இன்றைய காலத்திற்கு அவசியமான பகுதிகள் என நம்புகின்றேன்.அரசியல் வரலாறு என்பது ஒரு சமூகத்தின் அடையாளமாகும்.சமுகத்தின் இருப்பு, உரிமை போன்ற எல்லா விடயங்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆயுதமாக உள்ளது.அந்த வகையில் அஷ்ரஃப் அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் அரசியலில் மறக்க முடியாததும் தவிர்க்க முடியாததுமான மனிதராவார்.அவர் உருவாக்கிய நோக்கம்இ கொண்டு வந்த பாதை இன்று இன்றைய அரசியலில் மிகக்குறைவான நிலையில் காணப்பட்டாலும் வலுமிக்க அரசியல் கட்டமைப்பை சமூகம் வேண்டி நிற்கின்றது.இதனை அனைவரும் கருத்தில் கொண்டு அஷ்ரஃப் விட்ட இடைவெளியை தொடர்ந்து பயணிக்க முயற்சிப்போம்.

தொகுப்பு: –
தன்ஸீம் றஹ்மத்துள்ளாஹ்,
இலங்கை தென்கிழக்கு
பல்கலைக்கழக கலை
கலாச்சார பீட மாணவன்




# ரவூப் ஹக்கீம் தனது தலைமையை காப்பாற்ற முயன்றாரே தவிர முஸ்லிம்களின் எந்த உரிமையையும் பெற்றுத்தர முயலவில்லை

(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இவ்வளவு காலமும் தனது தலைமையையும், பதவியையும் காப்பாற்ற முயன்றாரே தவிர முஸ்லிம்களின் எந்த உரிமையையும் பெற்றுத்தர முயலவில்லை என நாம் நீண்டகாலமாகவே சொல்லிவருகின்றோம்.

இவற்றை இப்போது அந்தக்கட்ட்சியின் முக்கியஸ்தர்கள் சொல்ல ஆரம்பித்துள்ளார்கள் என உலமாக்கட்சியின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஒலிபரப்பான நிகழ்வொன்றில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய கொள்கை பரப்பு செயலாளர் முபீன் கட்சித்தலைவர் தொடபில் தெரிவித்த கருத்துத் தெரிவிக்கையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இவ்வளவு காலமும் தனது தலைமையையும், பதவியையும் காப்பாற்ற முயன்றாரே தவிர முஸ்லிம்களின் எந்த உரிமையையும் அவர் பெற்றுத்தரவில்லை எனவும் முபீன் தெரிவித்தார்.

இதைத்தானே உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் நீண்டகாலமாக சொல்லி வருகிறார்.

தன் பதவி, பண சுயநலத்துக்காக கட்சி செய்யும் ஹக்கீமுக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கு ஆதரவாக இன்னமும் இருப்பது இந்த சமூகத்தின் துன்பங்களுக்கு ஹக்கீமுக்கு ஒத்துழைப்பு கொடுப்பதாகும்.

ஹக்கீமும் வேண்டாம், முஸ்லிம் காங்கிரசும் வேண்டாம் என்று சமூகம் கூறாத வரை நமக்கு விடிவே இல்லை.

# சுயதனிமைப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு சுவதாரணி பூஸ்டர் மருந்துப் பொதிகள்



(எம்.ஐ.எம்.றியாஸ்)

கொரோனா தொற்று நோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் மூலம் நாட்டில் ஏற்பட்டு இருக்கும் அசாதாரண சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு கொவிட்-19 வைரசுக்கெதிரான நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த சுவதாரணி பூஸ்டர் மருந்துப் பொதிகள் இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்டம் பூராகவும் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் சம்மாந்துறை ஜனாசா நலன்புரிச்சங்கத்தின் வேண்டுதலின் பேரில் வலத்தாப்பிட்டி மூவீன மக்களுக்கும் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகள் உட்பட ஏனையவர்களுக்கும் வீடு வீடாகச் நேற்றுச் சென்று கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும்,நிந்தவூர் ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.ஏ.நபீல் தலைமையில் பூஸ்டர் வழங்கி வைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கொவிட்-19 இன் தாக்கம் அம்பாறை மாவட்டம் மட்டும் அல்லாது முழு நாட்டிலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.கொரோனா தொற்று காரணமாக வீடுகளில் உள்ளவர்களின் நலன் கருதி அவர்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர்களான ஏ.சீ.டில்சாத்,எம்.எஸ்.எம்.நஜீப்,எம்.எப்.ரிஸ்மியா, சம்மாந்துறை ஜனாசா நலன்புரிச் சங்கத்தின் தலைவர் அல்-ஹாபீஸ் எம்.ரீ.எம்.றமீஸ் மற்றும் ஊழியர்கள் சம்மாந்துறை ஜனாசா நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆயுர்வேத பூஸ்டர் மருந்து பொதிகளை மக்களின் காலடிக்குச் சென்று வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்லாது, ஒலி பெருக்கி மூலமாக இக்கொடிய நோயான கொவிட்-19 இல் இருந்து மக்கள் எவ்வாறு பாதுகாப்பு பெற வேண்டும்,இதற்கு உட்கொள்ளும் உணவு வகைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும்,சுதேச மருத்துவத்துறை மூலமாக பாதுகாப்பு பெறுவது எவ்வாறு அவதானத்துக்குரிய பிரதேசங்களுக்கு சென்று வந்தால் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும்,அறிகுறிகள் தென்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் பல விடயங்களை மக்களுக்கு விழிப்புணர்வு மூலமாக தெளிவுபடுத்தப்பட்டு துண்டுப் பிரசுரங்கள் வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நான்கு வறிய நான்கு குடும்பங்கள் அரசாங்க அதிபரினால் உதவி



(அ . அச்சுதன்)

கோவிட் வைரஸ் காரணமாக தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டனால் தமது வாழ்வாதாரங்களை இழந்த திருகோணமலை மாவட்டத்தின் ஆண்டான்குளம் கிராம சேவகர் உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த வறிய நான்கு குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவின் கவனத்திற்கு கிடைக்கப்பெற்றது.

அதனை அடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் குறித்த நான்கு குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அவசியமான உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு இன்று நடவடிக்கை எடுத்தார் .

அந்த அடிப்படையில் அவர்களுக்கான உலர் உணவு பொருட்கள் இன்று மாவட்ட செயலகத்தில் வைத்து மாவட்ட அரசாங்க அதிபரால் வழங்கி வைக்கப்பட்டது. இதில் விசேட தேவையுடைய ஒருவரும் பொருளாதார ரீதியாக மிக வறுமைக்குட்பட்ட மூன்று குடும்பங்களும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட அரசாங்க அதிபர் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இவ்வாறான விசேட தேவையுடையவர்கள், மிக வறிய குடும்பங்கள் உடையவர்களின் தேவையறிந்து அவசியமான உதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் இவ்வுதவிகள் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெறுவதுடன் அவை அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலிற்கிணங்க பிரதேச செயலகங்களுக்கும் உரிய தேவையுடையவர்களுக்கு வழங்குவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'ஷ்டியப்தம்' சோதிட நூல் வெளியீட்டு நிகழ்வு





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவைச் சேர்ந்த ஆசிரியரும் ,சோதிடக்கலைஞருமான கருணாகரம்பிள்ளை ரவீந்திரன் எழுதிய 'ஷஷ்டியப்தம்' என்ற சோதிட நூல் வெளியீட்டு நிகழ்வு காரைதீவில் நடைபெற்றது.

எமது வாழ்க்கையை செம்மைப்படுத்தக்கூடிய பல பெறுமதி வாய்ந்த குறிப்புகளை உள்ளடக்கிய ஆக்கத்தொகுப்பு நூலான 'ஷஷ்டியப்தம்' ,ஆசிரியரும் சோதிடக்கலைஞருமான கருணாகரம்பிள்ளை ரவீந்திரன் தனது 60ஆவது அகவையையொட்டி எழுதி வெளியிட்ட நூலாகும்.

85சிறுசிறு தலைப்புகளில் 130 பக்கங்களைக்கொண்டதாக அமைந்துள்ள இந்நூல் வெளியீட்டு நிகழ்வு, கொவிட் காரணமாக மிகவும் எளிமையாக குடும்ப உறுப்பினர்களுடன் மாத்திரம் சுகாதாரநடைமுறைகளுடன் இடம்பெற்றது.

'இராகி' என அழைக்கப்படும், பிரபல எழுத்தாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான இரா.கிருஸ்ணபிள்ளை முன்னிலையில் அவரது இல்லத்தில் இந்நூல் வெளியீட்டுநிகழ்வு இடம்பெற்றது. எழுத்தாளரும் உதவிக்கல்விப்பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜாவும் கலந்துசிறப்பித்தார்.

ஆசிரியரும் ,சோதிடக்கலைஞருமான கருணாகரம்பிள்ளை ரவீந்திரன் முதல்பிரதியை தனது குடும்பத்தார் சகிதம் மூத்தஎழுத்தாளர் இரா.கிருஸ்ணபிள்ளையிடம் வழங்கிவைத்தார். பதிலுக்கு அவர் எழுதிய 'கசப்பும் ஒருநாள் இனித்திடும்' என்ற நாவல் நூலை ஆசிரியர் க.ரவீந்திரனிடம் கையளித்தார்.

# ஐக்கிய காங்கிரஸினால் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு

(பாறுக் ஷிஹான்)



கொரோனா காரணமாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள பொது முடக்கத்தை அடுத்து வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாரக் அப்துல் மஜீதின் நெறிப்படுத்தலில் நாட்டின் பல பாகங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கல்குடா தொகுதி அமைப்பாளரும் ஐக்கிய காங்கிரசின் பிரதித்தலைவர்களில் ஒருவருமான சல்மான் வஹ்ஹாப் தலைமையில் ஓட்டமாவடியிலும், கொழும்பு பிரதான இணைப்பாளரும் கட்சியின் உப தவிசாளருமான மௌலவி இன்ஆம் தலைமையில் கொழும்பிலும், வன்னி மாவட்ட இணைப்பாளரும், கட்சியின் தேசிய அமைப்பாளர் சதீக் தலைமையில் மன்னாரிலும், காத்தான்குடி இணைப்பாளர் அன்வர் தலைமையில் காத்தான்குடியிலும், கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் சப்வான் தலைமையில் புத்தளத்திலும் வறிய மக்களுக்கு உதவும் முகமாக ஐக்கிய காங்கிரசினால் ஏழைகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வறிய மக்களுக்கு உதவும் முகமாக ஐக்கிய காங்கிரசினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கல்முனை அக்றம் பாம் ஹவுஸினால் வழங்கப்பட்ட நிதி உதவி மூலம் ஏழைகளுக்கான இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பொதுசத்திர சிகிச்சை நிபுணராக வைத்தியர் றிப்ஸான் ஜெமீல் நியமனம்



(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பொது சத்திர சிகிச்சை நிபுணராக வைத்தியர் றிப்ஸான் ஜெமீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமையினை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் முன்னிலையில் நேற்று கடமையினை பொறுப்பேற்றார்.

குருநாகல் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய நிலையிலேயே இடமாற்றம் பெற்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டார்.

கடமையினை பொறுப்பேற்ற அவர் ஞாபகார்த்தமாக வைத்தியசாலையின் வளாகத்தில் மரக்கன்றொன்றினையும் நாட்டி வைத்தார்.

நிகழ்வில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக குறித்த வைத்தியசாலையில் பொது சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் பி.கே.ரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கொவிட்-19 அவசர தீர்மானங்களுக்காக தம்பலகாமம் பிரதேச சபை விசேட கூட்டம்

(இஃஜாஸ் ஏ பரீட்)

கொவிட் - 19 காலத்தில் மக்களின் நலன்கருதி சில அவசரமான தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தம்பலகாமம் பிரதேச சபையின் விசேட மாதாந்த கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை கூடியது.

தம்பலகாமம் பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் ஏ.ஜி.சம்பிக பண்டார தலைமையில் நடைபெற்றது.

கொவிட் -19 காலத்தில் மக்களின் நலன் கருதி அவசரமாக சில தீர்மானங்களை முன்வைத்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

01. கொவிட் 19 காலத்தில் மக்களின் உணவுத் தேவை கருதி வீடுவீடாக அத்தியவசிய உணவு விநியோகம் மேற்கொள்ளல்.

02.மாட்டிறைச்சியினை பொதி செய்து விற்பனை மேற்கொள்ள கடைகாரர்களுக்கு அனுமதி.வழங்கல் போன்ற சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சேதனைப்பசளை தயாரிப்பு

(எம்.ஐ.எம்.றியாஸ்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு நஞ்சற்ற நாடு எனும் திட்டத்திற்கமைவாக அம்பாறை மாவட்டத்தில் சேதன உரத்திட்டத்தை செயற்படுத்லுக்கமைவாக அட்டாளைச்சேனை பிரதேச செயகத்தின் ஏற்பாடில் சேதனைப்பயளையின் பயன்பாடும்,தயாரிப்பு முறையும் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் ஷாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் மத்திய நிலையப் பொறுப்பு விவசாயப் போதனாசிரியர் ஏ.எச்.ஏ.முபாறக் பிரதம வளவாளராகக் கலந்து கொண்டு சேதனைப்பயளையினை எவ்வாறு உற்பத்தி செய்வது தொடர்பில் பயிற்சிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் பெரும் போகத்தில் இருந்து இரசாயனப் பசளைகள் மற்றும் இரசாயன கிருமிநாசினிகள் பயன்படுத்துவது தடை செய்யப்படுவதாக விவசாயத்திணைக்களம் அறிவித்துள்ளது.நாட்டு மக்களுக்கு நஞ்சற்ற உற்பத்திப் பொருட்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் நோயற்ற சமுதாயத்தை உருவாக்கும் வகையில் விவசாயத்திணைக்களம் நாடு முழுவதும் சேதனப்பசளை பாவனை முறையை ஊக்குவித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எப்.நஹிஜா முஷாபீர்,உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹுசைனுதீன்,சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லா,நிருவாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழில்,கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜௌபர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மக்களின் ஒத்துளைப்பின்றி கோரோனாவை கட்டுப்படுத்தமுடியாது





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினை மீறி அனாவசியமாக வீதிகளில் நடமாடுவேர்கள் அதிகரித்து காணப்படுவதனால் இரானுவத்தினர் மற்றும் பொலிசார் சுகாதார தரப்பினருடன் இணைந்து கடந்த சில நாட்களாக கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுவருகின்ற போதிலும். மக்களின் நடமாட்டம் குறையவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

பொது இடங்களில் அதிகளவான மக்கள் நடமாடுவது தொடர்ச்சியாக உள்ளமையும் பொருட்களை தொடர்ச்சியாக கொள்வனவில் ஈடுபட்டு வருவதும் மீன் சந்தைகளில் அதிகளவான மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற தவறிய நிலையில் மக்கள் கட்டுக்கடங்காமல் உள்ளமை கவலையளிப்பதாக சுகாதார தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

பொதுவாக வீட்டுக்கு ஒருவர் தங்களின் அத்தியாவசிய தேவைக்காக செல்லமுடியும் என்று அதிகளவானவர்கள் சுகாதார விதிகளை மீறி மக்கள் செயல்ப்படுவதும் வீதிகளில் நடமாடுவதும் அதிகரித்துக்கானப்படுகின்றது.

அரசினால் விடுக்கப்பட்டுள்ள கட்டளைகளை பின்பற்றி மக்கள் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு முறை செல்லாது அனைத்து பொருட்களையும் ஒரேதடவையில் வாங்குவதன் மூலமும் வெளிபயணங்களை தவித்துக்கொள்வதன்மூலம் இந்த கொடிய கொரோனாவில் இருந்து விடுபடமுடியும்.

# வித்யாஜோதி இல்லத்திலும் கோவிட்

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள வித்யாஜோதி மாணவர் இல்லத்தில்12 சிறுவர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இல்லத்தில் உள்ள சிறுவன் ஒருவர் சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்று பரிசோதனை மேற்கொண்ட போது கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து நேற்று இல்லத்தில் உள்ள ஏனைய சிறுவர்கள் 13பேருக்கும் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 11பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு பணிபுரியும் வேலையாட்கள் மூன்று பேரில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தடுப்பூசி ஏற்றும் பணிகள்

(ந.குகதர்சன்)

அரசாங்கத்தினால் கொரோனா எதிர்ப்பு தடுப்பூசிகளை ஏற்றும் பணிகள் நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள போதும் இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.மயூரனின் வழிகாட்டலில் மாவட்டத்தில் உள்ள பதினான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது

அந்தவகையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ரி.எஸ்.சஞ்ஜீவ் தலைமையில் இடம்பெற்றது.

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் முப்பது வயது மேற்பட்ட பொதுமக்களுக்கு வாழைச்சேனை பிரதேச சபை நூலகம், கல்குடா கிளினிக் நிலையம், கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் நடைபெற்றது.

தடுப்பு ஊசி ஏற்றும் பணியில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் போது சத்திர சிகிச்சை நிபுணராக வைத்தியர் றிப்ஸான் ஜெமீல் நியமனம்




(வி.சுகிர்தகுமார் )

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பொது சத்திர சிகிச்சை நிபுணராக வைத்தியர் றிப்ஸான் ஜெமீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமையினை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் முன்னிலையில் நேற்று கடமையினை பொறுப்பேற்றார்.

குருநாகல் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய நிலையிலேயே இடமாற்றம் பெற்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டார். கடமையினை பொறுப்பேற்ற அவர் ஞாபகார்த்தமாக வைத்தியசாலையின் வளாகத்தில் மரக்கன்றொன்றினையும் நாட்டி வைத்தார்.

நிகழ்வில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக குறித்த வைத்தியசாலையில் பொது சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் பி.கே.ரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# “உங்களுக்கு வீடு நாட்டிற்கு எதிர்காலம்’ என்ற திட்டத்தின் கீழ் வீடு கையளிப்பு

( வாஸ் கூஞ்ஞ)

அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய ‘உங்களுக்கு வீடு நாட்டிற்கு எதிர்காலம்’ என்ற திட்டத்தின் கீழ் கிராமத்திலுள்ள ஒரு ஏழை குடும்பத்துக்கு அமைக்கப்பட்ட வீட்டை கையளித்த நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஓலைத்தொடுவாய் என்னும் கிராமத்தில் செவ்வாய் கிழமை (14.09.2021) நடைபெற்ற இவ் நிகழ்வானது மன்னார் வீடமைப்பு அதிகாரசபை முகமையாளர் நோயல் ஜெயசந்திரன் தலைமையில் இவ் வீடு கையளிக்கும் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோர் இதில் கலந்து கொண்டு இவ் வீட்டை பயனாளிக் குடும்பத்துக்கு திறந்து கையளித்தனர்.

அரசாங்கத்தின் ஆறு லட்சம் ரூபா மானிய அடிப்படையில் இவ் வீட்டுக்கு இவ் வருடம் ஜனவரி 22 ந் திகதி அரசாங்க அதிபரால் அடிக்கல் நட்டப்பட்டு இவ் வீட்டு பயனாளியின் பங்களிப்புடன் சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான வீடாக இது அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



அதாவது மன்னார் மாவட்டத்தில் 153 கிராம அலுவலகப் பிரிவிகளில் இவ் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த வருடம் 67 குடும்பங்களுக்கு இவ் திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வருடம் நிதி பற்றாக்குறை காரணமாக இவ் திட்டத்தின் கீழ் 51 வீடுகள் அமைப்பதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் வீடமைப்பு அதிகார சபை முகமையாளர் நோயல் ஜெயசந்திரன் தெரிவித்தார்.

கொரோனா மற்றும் நிதி பற்றாக்குறை காரணத்தினாலும் ஏனைய வீட்டுத் திட்டம் நிறைவு பெறாத நிலை இருந்தபோதும் இந்த வருடத்தில் இதுவே முதல் வீடு திறந்து கையளிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.கே.எம்.முஜாஹிர் தனது பதவி மற்றும் உறுப்புரிமைகளிலிருந்து நீக்கம்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார்பிரதேசசபையின் தவிசாளர் சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் அப் பதவியில் பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்போது குற்றங்களைற புரிந்துள்ளார் என்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இருப்பதாக என தெரிவித்து தவிசாளர் மற்றும் சபை அங்கத்துவர் பதவிகளிலிருந்து நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.



மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது கடந்த 09.03.2018 அன்று இடம்பெற்றது.

இவ் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியானது இவ் பிரதேச சபைக்கான ஆட்சியை தன்வசம் கைப்பற்றியிருந்தது.

இதற்கமைய இவ் பிரதேச சபைக்கான தவிசாளராக இவ் கட்சியைச் சார்ந்த சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் புதுக்குடியிருப்பு வட்டாரத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் இவர் மன்னார் பிரதேச சபையின் தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் மன்னார் பிரதேச சபையின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 185 (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய எவையேனும் தகுதியின்மைகள் உள்ளனவா என்பது பற்றி விசாரனை செய்து அறிக்கை சமர்ப்பிப்தற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரிவு 185 (2) ஆம் உப பிரிவுகளுக்கமைய நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதி அலுவலர் கந்தையா அரியநாயகம் அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரனை குழுவினால் விசாரனை செய்யப்பட்டு வாதித்தரப்பின் சாட்சியங்களைக் கவனத்திற் கொண்டதன் பின்பே இவர் தனது மன்னார் தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று வட மாகாண ஆளுநர் திருமதி பி.ச.ம.சார்ள்ஸ் 2021.09.13 ந் திகதி வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகிதியிலிருந்து இவர்தனது இவ் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளுக்கு உம் கட்டமாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புகிளைத் தோண்டர்கள் அனுப்பி வைப்பு

(ரக்ஸனா)

கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளுக்கு இரண்டாம் கட்டமாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக்கிளைத் தொண்டர்கள் அனுப்பி வைப்பு.

கொவிட் 19 செயற்பாடுகளுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தம்மாலான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றது. இந்நிலையில் கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளுக்கு இலங்கை முழுவதும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்களை வழங்கியும் உதவி வருகின்றது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளால் முன்னெடுக்கப்படும். கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினால் தொண்டர்கள் இரண்டாம் கட்டமாகவும் அனுப்பி வைக்கப் படவுள்ளனர். இவ்வாறு தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளுக்கு உதவும் தொண்டர்களுக்குரிய விளக்கங்களும், அது தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய் கிழமை(14) இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையில் நடைபெற்றது.



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் தம்பிப்போடி வசந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்; பொருளாளர் வடிவேல் சக்திவேல், கிளைநிறைவேற்று உத்தியோகஸ்த்தர் திருமதி வேணுஷா பிரசாந் கிளைஉத்தியோகஸ்த்தர் கண்டுமணி ரூபன், மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தொண்டர்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தொண்டர்களுக்கு கொவிட் 19 தொடர்பிலும், அதன் தடுப்பூசி தொடர்பிலும், தடுப்பூசி வழங்கும் இடங்களில் சுகாதாரத்துறை உத்தியோகஸ்த்தர்களுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பிலும் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டதோடு, அவர்களுக்குத் தேவையான முகக்கவசங்கள், கையுறை, தொற்று நீங்கி என்பனவும் வழங்கப்பட்டன. இத்தொண்டர்கள் வியாழக்கிழமை(16) முதல் மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும், தலா இரண்டு தொண்டர்கள் வீதம் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு கொவிட் 19 தடுப்பூச் வழங்கும் வழங்கப்பட்டுவரும் செயற்பாடுக்ளுக்கு கடந்த மாதம் முதற்கட்டமாக 25 தொண்டர்கள் மாவட்டம் முழுவதுவும் சுகாதாரத் திணைக்களத்தினருடன் இணைந்து செயற்பட்டிருந்தனர் அவர்களின் சேவைகள் முடிவுற்றிருந்த இந்நிலையில் மீண்டும் வியாழக்கிழமை(16) முதல் இரண்டாம் கட்டமாக சேவை வழங்கவுள்ளனர். இலங்கையில் அவ்வப்போது ஏற்பட்டு வரும் இடர்களுக்காக அரசாங்கம் மக்களுக்கு உதவி வருவதற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தம்மாலான உதவிகளை இலங்கை முழுவதும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.